


**27. 12. 2025**

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திரமோடி புதுதில்லியில் நடைபெறும் 5-வது தேசிய தலைமை செயலாளர்கள் மாநாட்டில் இன்று உரையாற்றுகிறார்.

2. மின்னணுவியல் துறை நாட்டின் 3-வது பெரிய ஏற்றுமதி பிரிவாக உருவெடுத்துள்ளது என்று மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. திருவண்ணாமலை மாவட்டத்தில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்பு வேளாண் சேமிப்பு கிடங்கு அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

4. வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், முகவரி மாற்றம் உள்ளிட்ட திருத்தங்களை மேற்கொள்ள இன்றும், நாளையும் தமிழகத்தில் சிறப்பு முகாம்கள் நடைபெறுகின்றன.

5. தமிழ்நாட்டில் நீர்நில பறவைகள் குறித்த ஒருங்கிணைந்த கணக்கெடுப்பு பணிகள் இன்று தொடங்கின.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி புதுதில்லியில் நடைபெறும் 5-வது தேசிய தலைமை செயலாளர்கள் மாநாட்டில் இன்று உரையாற்றுகிறார்.

வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான மனிதவளம் என்பதை கருப்பொருளாக கொண்டு நடைபெறும் இந்த 3 நாள் மாநாட்டில் அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமைச் செயலாளர்கள் உயரதிகாரிகள் மற்றும் பல்வேறு துறைசார் வல்லுநர்கள் பங்கேற்றுள்ளனர்.

நாட்டின் வளர்ச்சிக்கான பணிகளை மத்திய மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயல்படுத்துவதை நோக்கமாக கொண்டு இம்மாநாடு நடத்தப்படுகிறது.

கல்வி, திறன்மேம்பாடு, விளையாட்டு, பாடத்திட்டங்கள் உள்ளிட்டவை குறித்து இம்மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

குடியரசு தலைவர்

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு கோவா, கர்நாடகா, ஜார்கண்ட் மாநிலங்களுக்கு இன்று முதல் நான்கு நாட்களுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

முதற்கட்டமாக இன்று கோவா செல்லும் குடியரசு தலைவர், நாளை கர்நாடகாவில் உள்ள கார்வார் துறைமுகத்திலிருந்து நீர் மூழ்கி கப்பலில், கடல் பயணம் மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖❖

அஷ்வினி வைஷ்ணவ்

மின்னணுவியல் துறை நாட்டின் 3-வது பெரிய ஏற்றுமதி பிரிவாக உருவெடுத்துள்ளது என்று மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளில் இத்துறையில் 25 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ள அவர், உற்பத்தி பிரிவில் 10 குறைகடத்தி அலகுகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள நிலையில் அவற்றில் 3 ஆரம்ப உற்பத்தி நிலைகளை எட்டியுள்ளது என்றார்.

❖❖❖❖❖❖❖❖

மன் கி பாத்

அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 129-வது முறையாக பிரதமர் நாளை காலை
11 மணிக்கு உரையாற்றுகிறார்.

தூர்தர்ஷன், வானொலி நிலையங்கள், பிரதமர் அலுவலக யூடியூப் அலைவரிசைகள் உள்ளிட்டவற்றில் பிரதமரின் உரை நேரடியாகவும், தொடர்ந்து 11.30 மணிக்கும் இரவு 8 மணிக்கும் இதன் மொழியாக்கமும் இடம்பெறும்.

❖❖❖❖❖❖❖❖

MUSIC

2025-ம் ஆண்டில் வரி சீர்த்திருத்தங்கள் குறித்த ஒரு செய்தித் தொகுப்பு ..

MUSIC

நம்நாட்டின் வளர்ச்சிப் பாதையில் 2025-ம் ஆண்டு இன்றியமையா வரி சீர்த்திருத்தங்களுடன் ஒரு புதிய அத்தியாயத்தை படைத்துள்ளது.

கொள்கைகள் அனைத்தும் வளர்ச்சிகளாக மேம்படுத்தப்பட்டு, ஆக்கப்பூர்வமான சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

மாநிலங்கள் மற்றும் குடிமக்கள் இடையே வலுவான தொடர்பையே வரி சீர்த்திருத்தங்கள் பிரதிபலிக்கின்றன.

1930-ம் ஆண்டு உப்பு மீது சுமத்தப்பட்ட வரி தொடங்கி 1970-ம் ஆண்டுகளில் 97.5 சதவிகித அளவிற்கு வரி விதிக்கப்பட்டதை நாட்டின் வரி வரலாறு புலப்படுத்துகிறது.

நரேந்திரமோடி அரசு கடந்த 8 ஆண்டுகளுக்கும் மேலாக கொண்டுவந்துள்ள வரி சீர்த்திருத்தங்களின் தொடர்ச்சியாக இந்த ஆண்டு வரி சீர்த்திருத்தங்களின் ஆண்டாக கருதப்படுகிறது.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் முக்கிய தூண்களாக இந்த ஆண்டின் சரக்கு சேவைவரி சீர்த்திருத்தங்கள் திகழ்கின்றன.

கடந்த செப்டம்பர் 22-ம் தேதியிலிருந்து இருவிகித சரக்கு மற்றும் சேவை வரி நடைமுறைப்படுத்தப் பட்டதால் 33 உயிர்காக்கும் மருந்துகளுக்கு முற்றிலும் விலக்களிக்கப்பட்டது.

பால், ரொட்டி, உலர் பழங்கள் உள்ளிட்ட பொருட்களுக்கு 5 சதவிகிதமாகவும்,

சிறிய ரக கார் மோட்டார் சைக்கிள், குளிர் சாதன பொருட்களுக்கு 18 சதவிகிமாக குறைக்கப்பட்டதால்

சரக்கு சேவைவரி குறைப்பு நாட்டு மக்களுக்கான தீபாவளி பரிசாக மத்திய அரசு வழங்கியது.

இவ்வரி குறைப்பால் அத்தியாவசிய உணவுப் பொருட்கள், வீட்டு உபயோக சாதனங்கள், மாணாக்கருக்கான கல்வி உபகரணங்கள் உள்ளிட்ட பல பொருட்களின் விலை குறைந்தது.

ஆயுள் காப்பீடு, மருத்துவ காப்பீடு உள்ளிட்டவற்றிற்கும் முற்றிலும் வரி விலக்களிக்கப்பட்டது மருத்துவத்துறையில் பெரும் சாதனையாக கருதப்படுகிறது.

வரி சீரமைப்பின் காரணமாக நாட்டு மக்களின் வாழ்வு மேம்பட்டதுடன் வர்த்தகமும், எளிமையாக்கப் பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் வரி சீர்த்திருத்தங்கள் முக்கிய பங்காற்றுவதாக திருச்சி மண்டல சரக்கு மற்றும் சேவை வரி உதவி ஆணையர் திரு.சங்கர் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு சரக்கு சேவை வரி துணை புரிவதாக மதுரையை சேர்ந்த பொருளாதாரத்துறை முன்னாள் பேராசிரியர் திரு. முத்து ராஜா தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

MUSIC

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழகத்தில் அண்மை மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு விரைவில் நிவாரணத் தொகை வழங்கப்படும்
என முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலையில் வேளாண் கண்காட்சி அரங்கம் மற்றும் உழவர் நல சேவை மையங்களை இன்று துவக்கி வைத்து பேசியஅவர், இம்மாவட்டத்தில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்பு வேளாண் சேமிப்பு கிடங்கு அமைக்கப்படும் என்றார்.

.. வாய்ஸ் ..

இம்மாவட்டத்தில் 63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 46 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டிய முதலமைச்சர் ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

மேலும் 631 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 314 முடிவுற்ற பணிகளை தொடங்கி வைத்தார்.

❖❖❖❖❖❖❖❖

அமைச்சர்கள்

திருச்சி மாநகராட்சியில் சாக்கடை அடைப்பை நீக்கும் 3 கோடியே 78 லட்ச ரூபாய் மதிப்பிலான சூப்பர் சக்கர
ரீ-சைக்கிளினர் வாகனத்தை மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே. என். நேரு கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் இன்று நடைபெற்ற தனியார்த்துறை வேலைவாய்ப்பு முகாமில் மாநில துணிநூல் துறை அமைச்சர் திரு. காந்தி பணி நியமன ஆணைகளை இன்று வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖

வாக்காளர் பட்டியல்

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கம், முகவரி மாற்றம் உள்ளிட்ட திருத்தங்களை மேற்கொள்ள இன்றும், நாளையும் சிறப்பு முகாம்கள் நடைபெறுகின்றன.

மாநிலம் முழுவதும் 75 ஆயிரம் வாக்குச் சாவடிகளில் நடைபெறும் இம்முகாமை வாக்காளர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் 7 சட்டமன்ற தொகுதிகளிலும் நடைபெறும் முகாமை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சரவணன் கேட்டுக் கொண்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

பறவைகள் கணக்கெடுப்பு

தமிழ்நாட்டில் நடப்பாண்டிற்கான நீர் நில பறவைகள் குறித்த ஒருங்கிணைந்த கணக்கெடுப்பு பணிகள் இன்று தொடங்கின.

வனத்துறை சார்பில் 2 நாட்கள் நடைபெறவுள்ள இப்பணிகள் மாநிலத்தின் ஒவ்வொரு வனக்கோட்டத்திலும்
25 இடங்களில் நடைபெறும்.

தென்காசி மாவட்டத்தில் இப்பணிகளை ஆட்சித்தலைவர் திரு.கமல் கிஷோர் இன்று துவக்கி வைத்தார்.

நீலகிரி மாவட்டத்திற்கு உட்பட்ட 4 சரகங்களில் உள்ள
20 இடங்களில் இக்கணக்கெடுப்பு பணிகள் நாளை தொடங்குவதாக எமது செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

இருவரி

கேரளாவில் பறவை காய்ச்சல் பரவி வரும் நிலையில் கோவையில் எல்லைப் பகுதிகளில் உள்ள சோதனை சாவடிகளில் பறவை காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

அரியலூர் மாவட்டத்தில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நாளை தொடங்குகிறது.

மாவட்டத்தில் ஒருலட்சத்து 62 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட திட்டமிடப் பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு. ரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

இரங்கல்

திருச்சி அகில இந்திய வானொலியில் முதுநிலை உதவி பொறியாளராக பணியாற்றி ஓய்வுபெற்ற சுந்தர்ராஜன் உடல் நலக்குறைவால் காலமானார்.

அவருக்கு வயது 69.

ஆவடி, மதுரை வானொலி நிலையங்கள்,

காரைக்கால், புதுக்கோட்டை தொலைக்காட்சி, அஞ்சல் நிலையங்களிலும் இவர் பணிபுரிந்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

இந்திய - இலங்கை மகளிர் அணிகளுக்கு இடையேயான 4-வது மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டி திருவனந்தபுரத்தில் நாளை நடைபெறுகிறது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரில் இந்தியா 3-0 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது.

❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖